# பௌத்த மதக் கதைகள்

## சாந்திப்பிரியா



ஒருமுறை இலங்கையை தேவப்பிரசன்னா என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவர் நல்லவர், அனைவரிடமும் அன்புடன் இருந்தவர் என்றாலும் நாத்திகர். கடவுள் அனைத்து இடங்களிலும் பரவி உள்ளார், அவர் எங்கும் நிறைந்தவர் என்ற கூற்றை நம்பாதவர். கடவுளைப் பற்றிய அவரது சந்தேகங்களுக்கு பல அறிஞர்கள் மற்றும் பண்டிதர்களினால் சரியான விளக்கம் தர முடியவில்லை என்பதினால் தனக்கு தெய்வங்கள் மீது உள்ள சந்தேகங்களுக்கு திருப்தியாக விடை தருபவர்களுக்கு நிறைய சன்மானம் அளிப்பதாக அறிவித்து இருந்தார்.

அதைக் கேள்விப்பட்ட ஒரு துறவி இலங்கையின் தலைநகருக்கு விஜயம் செய்தார், மன்னர் அவரிடம் மற்றவர்களிடம் கேட்ட அதே கேள்விகளை எழுப்பினார் ' அனைத்து இடங்களிலும் பரவி உள்ளதாக கூறப்படும் கடவுள்

எந்த பக்கத்தை பார்த்தபடி இருக்கின்றார், அவர் எங்கே, எந்த உருவில் இருக்கின்றார் என்பதை கூற இயலுமா ?

துறவி சிரித்துக்கொண்டே மன்னரிடம் அடுத்த நாள் வந்து அவரது சந்தேகங்களைத் தீர்த்துக் வைப்பதாக கூறினார். கூறியபடியே துறவி அடுத்த நாள் வந்தார். முதலில் ஒரு கிண்ணம் நிறைய வெண்ணை அடங்கிய பால் மற்றும் ஒரு பெரிய பீப்பாய் நிறைய உப்பு தண்ணீரை வரவழைக்குமாறு மன்னரிடம் கூறினார். மன்னனும் அதற்கு ஏற்பாடு செய்தார். முதலில் பௌத்த துறவி கிண்ணத்தில் இருந்த பாலை தனது விரலால் கிளறிக் கொண்டே, அடிக்கடி பீப்பாயில் இருந்த தண்ணீரையும் பார்த்தார். சற்று நேரத்துக்கு பின்னர் 'நீங்கள் என்ன தேடுகின்றீர்கள்' என்று கேட்ட மன்னனைப் பார்த்து துறவி கூறினார் ' மன்னா நீங்கள் தந்த இந்த பாலில் வெண்ணையும் இல்லை, பீப்பாயில் உப்பும் காணப்படவில்லையே என்பதால் அவற்றை தேடுகிறேன்'.

மன்னர் அவரைப் பார்த்து கேலியாக சிரித்தவாறு கூறினார் ' கண்களுக்கு தெரியாமல் வெண்ணையும் உப்பும் பால் பாத்திரத்திலும், பீப்பாயில் உள்ள நீரிலும் கலந்து உள்ளன. பாலை தயிராக்கி கடைந்தால் மட்டுமே வெண்ணையை எடுக்க முடியும். அதை போல உப்பு நீரை சுத்தமாக்கினால்தானே உப்பை பிரித்து எடுக்க முடியும். இது அனைவருக்கும் தெரிந்த சாதாரண விஷயம்தானே. உங்களுக்கு தெரியவில்லையா?' என்று கேட்டார். அதைக் கேட்ட துறவி மன்னனைப் பார்த்து சிரித்தபடி கூறினார் 'மன்னா பாலில் கண்களுக்கு தெரியாமல் கலந்துள்ள வெண்ணையை பார்க்க முடியாத உங்களால், உப்பு நீரில் உப்பைக் காண முடியாத உங்களினால், இந்த பிரபஞ்சத்தில் கண்களுக்கு தெரியாத உருவில் உள்ள இறைவனை எப்படி சாதாரணமாக பார்க்க முடியும்? கடவுளைக் காண விரும்புவோர் அதற்கு முதலில் தங்களை கடவுள்மீது நம்பிக்கையும் உறுதியான பக்தியையும் கொண்டவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதன் பின் கடவுளை காண முறைப்படி பிரார்த்தனை செய்தால் அதாவது -பாலை தயிராக்கி வெண்ணை எடுப்பதை போல, உப்பு நீரை பதப்படுத்தி உப்பை எடுப்பதை போல-

கடவுளிடம் பூரண பக்தி செலுத்தி வந்தால் நிச்சயமாக கடவுளைக் காண முடியும்' என்றார். அதைக் கேட்டு சற்றே வெட்கம் அடைந்த மன்னன் தளராமல் கேட்டார் 'உங்கள் கூற்றை சற்று நேரத்துக்கு ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எங்கும் நிறைந்துள்ளதாக கூறப்படும் கடவுள் இப்போது எந்த திசையை நோக்கி பார்த்தவாறு இருக்கின்றார் என்பதைக் கூற முடியுமா ?'

அதைக் கேட்ட துறவி மன்னனிடம் ஒரு எண்ணெய் விளக்கைக் எடுத்து வருமாறு கூறிவிட்டு, அவரை இருண்ட அறைக்குள் அழைத்துச் சென்று அந்த விளக்கை ஏற்றுமாறு கூறினார். ஏற்றப்பட்ட விளக்கு அனைத்து பகுதியையும் வெளிச்சமாக்க, அந்த துறவி மன்னனிடம் கேட்டார் ' மன்னா விளக்கின் ஒளி எந்த பக்கத்தை நோக்கி வெளிச்சத்தை பாய்ச்சுகிறது?'. மன்னன் கூறினார் 'இதென்ன கேள்வி, விளக்கு எறிந்தால் ஒரே நேரத்தில் அனைத்து பக்கத்திலும் அல்லவா அதன் ஒளிக் கதிர் பாயும்'. துறவி சிரித்தபடிக் கூறினார் ' எப்படி ஒரு விளக்கின் ஒளி அனைத்து பக்கத்திலும் ஒரே நேரத்தில் பாயுமோ, அதை போலத்தான் எங்கும் நிறைந்து உள்ள, கண்களுக்கு உள்ள கடவுளின் ஒளிக் கதிர் போன்ற பார்வை, ஒரு திசையை மட்டும் அல்ல, அனைத்து திசைகளையும் நோக்கி உள்ளது'. மன்னன் அமைதியானான்.

அடுத்து கடவுள் எந்த வடிவத்தில் இருக்கிறார் என்று கேட்ட மன்னனின் மூன்றாவது சந்தேகத்திற்கு துறவி வித்யாசமான முறையில் பதிலைக் கொடுத்தார். துறவி மன்னனிடம் கேட்டார் ‘மன்னா உங்கள் உடலுக்குள் உள்ள ஆத்மாவின் தோற்றம் என்ன என்பதை கூறுவீர்களா? ' மன்னர் மீண்டும் துறவியை கேலி செய்தார் 'ஒருவரது ஆத்மா வெளியே வந்து விட்டால் அவர்கள் மடிந்து அல்லவா போவார்கள். அப்படி இருக்கையில் ஆத்மாவின் தோற்றத்தை அவரால் எப்படிக் கூற முடியும் ?' . துறவி அமைதியாக கூறினார் ' சரி, நான் என்னுடைய ஆத்மாவை வெளியேற்றி விட்டு திரும்ப அழைத்துக் கொள்கிறேன். வெளியேறும் எனது ஆத்மாவின் தோற்றத்தைக் பார்த்து அதன் உருவை கூற முடியுமா?'. துறவிகள் பலர் ஞானம் பெற்றவர்கள். அவர்களால் கூடு விட்டு கூடு பாய்வது போல ஆத்மாவை வெளியேற்றிக்

கொண்டு மீண்டும் தமது உடலுக்குள் வர முடியும் என்பது மன்னனுக்கு தெரியாது. ஆகவே துறவி எதோ கேலியாகக் கூறுகிறார் என்று அசட்டையாக எண்ணிக் கொண்டு அவரது சவாலை ஏற்றுக் கொண்டார். உடனடியாக அந்த துறவி இறந்து போன ஒரு பறவையை ஒரு கூட்டில் வைத்து கொண்டு வருமாறு கூறினார். இறந்து போன பறவை கூட்டில் அடைக்கப்பட்டு வந்தது. துறவி ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு மன்னனிடம் தன் உடலை விட்டு வெளியேறும் தன்னுடைய ஆத்மா அந்த பறவையின் உடலில் புகுந்து கொண்ட பின், மீண்டும் தன் உடலுக்கே திரும்பி வந்து விடும் என்றும் அப்படி வெளியேறிச் செல்லும் தனது ஆத்மாவைப் பார்த்து அதன் உருவம் எப்படி இருந்தது என்பதைக் கூறுமாறு கேட்டுக் கொண்டார்.

அப்படிச் சொன்ன துறவி ஒரு நாற்காலியில் அமர்ந்தார். திடீரென கூண்டில் இறந்து போய் இருந்த பறவை கூண்டுக்குள் பறந்து கூச்சலிடத் தொடங்கியது. அப்போது நாற்காலியில் அமர்ந்து இருந்த துறவியின் உடல் அசைவில்லாமல் இருந்தது. அவர் உடலை தொட்டுப் பார்த்த அனைவரும் அவர் இறந்துவிட்டார் என்று நினைத்தார்கள். குழப்பத்தில் சில நிமிடங்கள் கடந்து விட்டன, திடீரென்று சிறகை விரித்து கூச்சலிட்ட பறவை மீண்டும் இறந்துபோனது. இறந்து கிடந்த உடலில் மீண்டும் புகுந்து எழுந்த துறவி மன்னரிடம் தனது ஆத்மாவின் உருவம் எப்படி இருந்தது எனக் கேட்டார். ஆத்மாவுக்கு உருவம் இல்லாததால் எதுவும் தெரியவில்லை என மன்னன் கூற துறவி கூறினார் 'மன்னா. ஒருவனால் உடலில் இருந்து வெளியேறும் ஆத்மா எந்த வடிவத்தில் உள்ளது என்பதையோ, தனக்குள் உள்ள ஆத்மாவின் உருவம் என்ன என்பதையோ பார்க்க இயலாதபோது, ஆத்மாவைப் போல உருவமற்ற உள்ள கடவுளை பார்க்க ஒருவர் எப்படி முயற்சி செய்யலாம்?' என்று கேட்டார். அரசன் வெட்கி தலை குனிந்து நின்று தனது ஆணவத்துக்கும், அறியாமைக்கும் மன்னிப்பைக் கேட்டார்.

# Buddhist Stories

## Santhipriya



Once Sri Lanka was ruled by a King called Devaprasanna. He was well behaved King but atheist and did not believe God and the theory that he pervade everywhere and omni present. Inspite of seeking answer from several scholars and saints on divine he could not get satisfactory answers to his doubts on God. Therefore he announced a big reward to anyone who could satisfactorily clear his doubts on divine.

One of the Monks visited his capital and the King asked the same question to him 'Where is God, which direction he looks at a particular time and in which form does he exist ?

The Monk smiled and told the King that he would clear his doubts the next day. The Monk came next day and asked the King to get him a bowlful of milk and a big can of salt water. When they were given to the Monk, he started stirring the bowl with milk with his finger curiously looking something inside the milk and in between searched for something inside the salt water can. Curious King asked him what was he searching instead of clearing his doubts. The Monk told the King that he was searching for the butter and salt in the can.

The King laughed and ridiculed him telling that no doubt the milk had the invisible butter inside, but it could only be seen if the milk is converted into curd and churned. Similarly unless the can of salt water is processed and allowed to dry the salt cannot be seen. The Monk coolly replied 'Oh, King, similar to how the invisible butter cannot be seen in the milk unless it is first converted into curd and then churned and the salt water processed to separate the invisible salt, the divine which exist everywhere in invisible form cannot be seen unless those who desire to see him believe in God, then with devotion pray to him in proper manner when the invisible God would certainly appear before them'. The embarrassed King asked the Monk 'Ok, I agree with your views for a minute, but clear me my second doubt. Everyone tells me that God is omnipresent and pervade everywhere, but could you tell me in which direction the divine who reportedly pervade in the universe is looking at right now?'.

The Monk asked the King to bring an oil lamp and lit up the lamp in a dark room. He then asked the King 'Before I clear your doubt, Oh, King please tell me

precisely in which direction the rays of the light is travelling?' The King had no answer except to tell that the light rays travel all around as the radiance of the light brightened all sides. The monk said 'Similar to the light of the lamp which is able to light up all sides together in one go, the God who is omnipresent, can look all directions simultaneously as he is light of this universe. When you can see the light rays travelling on all sides in one go, why cannot God look all sides simultaneously? Therefore be sure that he is presently looking in all directions simultaneously'.

To the third doubt of the King - in which form God exist- the monk demonstrated the answer in a different manner. He asked the King whether he can tell the appearance of the soul which is inside his body? The King again ridiculed the monk to tell that unless his soul came out, how could he tell its shape or form? Secondly once the soul comes out the body the man dies and how could then he tell its appearance or shape? The Monk asked the King in the event he takes out his (Monk's) soul and made to travel before him before entering into another dead body, whether he would be able to see and tell its shape and form ? The King immediately accepted the challenge thinking that the monk cannot take out his own soul, lest he would die and therefore he was diverting the topic. The King did not know that most of the Buddha monks who were direct disciples of Lord Buddha were enlightened souls and they can take out their souls from their body, and come back again after travelling somewhere on spiritual journey. The Monk asked the King to get a dead bird in a cage. The King was confused as to why he was asking for a dead bird be brought in a cage. In any case, the same was done and the Monk asked to King to watch his soul travel from his body and enter into

the bird and come back again to enter into his body. After saying so the Monk sat in a chair. Suddenly the dead bird in the cage started fluttering and shouting inside the cage having got its life back while the body of the Monk in the chair remained motionless and everyone screamed that he had died. Few minutes passed in chaos, when suddenly the bird which was fluttering and shouting fell dead again and the Monk got up.

The Monk smilingly asked the King what was the form of the soul which travelled from his body to enter into the bird and come back again. The King had no answer to offer as nothing was visible since the soul had no form. The Monk clarified to the King that when one cannot even know in which form his own soul inside his own body exist or see the soul of others, how could one attempt to see the God or question in which form the God existed? The King realized his foolishness on divine and apologized to the Monk for his ignorance and arrogance.